

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று (03.04.2025) தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு வீரபாண்டியக் கட்டபொம்மன் பண்பாட்டுக் கழகத்தின் மாநில பொதுச் செயலாளர் க.ராமகிருஷ்ணன் தலைமையில் தொட்டிய நாயக்கர் சமுதாய அறக்கட்டளை தலைவர் ஆ.பழனிச்சாமி, வீரபாண்டிய கட்டபொம்மன் இராஜ கம்பள நலச்சங்கத்தின் பொதுச்செயலாளர் சு.செந்தில்குமார், சில்லவார் இராஜகம்பள சமுதாய நலச்சங்கத்தின் தலைவர் ஆ.சீனிச்சாமி பாண்டியன், இராஜகம்பள மேன்மக்கள் அறக்கட்டளையின் தலைவர் ஞ.இராமராஜ் மற்றும் விடுதலைக்களம் கட்சித் தலைவர் கொ.நாகராஜன் ஆகியோர் நேரில் சந்தித்து சுதந்திரப் போராட்ட மாவீரன் வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த நாளான ஜனவரி 3ஆம் தேதியை தமிழ்நாடு அரசின் சார்பில் மாநிலம் முழுவதும் அரசு விழாவாக கொண்டாட வேண்டும் என்று கோரிக்கை மனு அளித்தனர்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்மிடிப்பூண்டி கிழக்கு ஒன்றியம் திமுக சார்பில் தலைவர் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்க நிகழ்ச்சி ஒன்றிய செயலாளர் ந. பரிமளம், கிளைக் கழகச் செயலாளருக்கு விஜயகுமார் ஆகியோர் வரவேற்பில் நடைபெற்றது இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினார் உடன் பேச்சாளர்கள் பசும்பொன் ரவிச்சந்திரன், ராஜராஜேஸ்வரி, சி.எச்.சேகர், மு.பகலவன், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, பா.செ.குணசேகரன், மு.மணிபாலன், முரளிதரன், புது.தமிழசரன், ம.தீபன், வேதாச்சலம், சரவணன் , ரவி, சாந்தி காளத்தி, ராமஜெயம் , மணி , அரிதாஸ் மாரிமுத்து, பத்ரிநாத் குமார் , செல்வம், பரி குணான், எழிலரசன், ரகு, வசந்த குமார், விநாயகம், தங்கவேல் உள்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்

### நிதியில்லாத காரணத்தால் தடைபட்டு நிற்கும் – 10 கிராமங்கள் பயன்பெறக்கூடிய

# உத்திரமேரூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றித் தாரீர்!

## சட்டப்பேரவையில் – க.சுந்தர் கோரிக்கை!

சென்னை, ஏப். 4-

சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது, உத்திரமேரூர் தொகுதி கழக உறுப்பினர் க.சுந்தர், “உத்திரமேரூர் தொகுதியில் 10 கிராமங்களுக்குப் பயனளிக்கக் கூடிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டும்” என்று கோரிக்கை விடுத்தார்.



சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-

க.சுந்தர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தில் அண்ணாத்தூர் மற்றும் சித்தனக்காவூர், தண்டரை, திருப்பினாயூர், திருவந்தவார், ஆலப்பாக்கம் போன்ற 10 கிராமங்களுக்கு இந்தக் கூட்டுக் குடிநீர் திட்டத்தை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக செயல்படுத்த வேண்டுமென்று ‘உங்கள் தொகுதியில் முதலமைச்சர்’ திட்டத்தின்கீழ் கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அங்கே குடிநீரின் தன்மை சரியில்லாத காரணத்தினால், அதுசம்பந்தமாக ஏற்கெனவே குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக ஒரு மதிப்பீடு தயார் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு குறைந்தது ஒரு 5 கோடி ரூபாய் தேவைப்படுகின்றது. தற்போது போதுமான நிதி இல்லை. நிதியில்லாத காரணத்தினால் அது தடைப்பட்டு நிற்கின்றது. அதை அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தருவார்களா?

அமைச்சர் கே.என்.நேரு: மொத்தம் தமிழ்நாட்டில் 19 கூட்டுக் குடிநீர் திட்டங்கள், புதிய திட்டங்கள் உருவாக்கப்பட்டன. அதிலே, ஒன்றிய அரசினுடைய ஜல் ஜீவன் திட்டத்திலே அவர்களே நிதி ஒதுக்கித் தருவதாக சொல்லியிருக்கிறார்கள். இப்போது இந்த ஆண்டு, முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்திலே 7 திட்டங்களை அறிவித்தார்கள். மேற்கொண்டு ஏற்கெனவே அறிவித்த திட்டங்கள் 3, ஆக மொத்தம் 10 திட்டங்கள். இப்போது மேலும் ஒரு புதிய திட்டத்தைச் சேர்த்து 11 திட்டங்களுக்குரிய நிதியை இந்த ஆண்டு மாநில அரசின் சார்பாக கொடுப்பதாக நிதி துறை அமைச்சர் அவர்களும் நிதி துறைச் செயலாளர் அவர்களும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இது பெரிய அளவிலே வருகிற ஒரு 50 M.L.D., 100 M.L.D. என்கிற அளவுக்கு வருகிற ஒரு திட்டம். உறுப்பினர் அவர்கள் உத்திரமேரூர் தொகுதியிலே அவருடைய பகுதியிலே பத்தே பத்து கிராமங்களுக்கு தேவை என்று சொல்லியிருக்கிறார். அதற்கு ரூபாய் 5 கோடிதான் தேவை என்று சொல்லியிருக்கிறார். உரிய முறையிலே, அதை இந்த ஆண்டே செய்வதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.




சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வானவில் விஜய் முன்னேற்பாட்டில் துறைமுகம் கிழக்கு பகுதி இளைஞர் அணி சார்பில் இளைஞர் அணி அமைப்பாளர் பி.செந்தில் குமார் தலைமையில் நீர்மோர், தண்ணீர் பந்தல் திறப்பு நிகழ்ச்சியில் பகுதி செயலாளர் எஸ் இராஜசேகர் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பா.ஜெகதீஷ் .இரா.கலைச்செல்வி, ப.விஷ்ணு ஏ.சுமன்ராஜ் கே.பாலாஜி த.பிலிப்ஸ் எஸ். இம்ரான்கான் எஸ்.வினோத்குமார் எல்.தாஹநவீன் எஸ்.புகழேந்தி எல்.சத்தியநாராயணன் அர்.ஏ.அஸ்லாம் ராஜா(ஏ) கதிரவன் ம.பரத்குமார் கே.கவியரசு ஆ.நா.பார்த்திபன் மாவட்ட அமைப்பாளர்கள் பி.விஜயகுமார் எல்.சம்பத்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### அண்ணா – காமராஜர் பெயர்களில் அமைந்துள்ள – சென்னை மீனம்பாக்கம்

# விமான நிலையத்திலிருந்து கோயம்பேடு - கிளாம்பாக்கத்திற்கு பேருந்துகள்!

## சட்டப்பேரவையில் – இ. கருணாநிதி வலியுறுத்தல்!

சென்னை. ஏப்.4-

“அண்ணா - காமராஜர் பெயர்களில் அமைந்துள்ள - சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து கோயம்பேட்டிற்கும் - கிளாம்பாக்கத்திற்கும் பேருந்துகள் இயக்கப்பட வேண்டும்” என்று சட்டப் பேரவையில் - பல்லாவரம் தொகுதி கழக எம்.எல்.ஏ. இ. கருணாநிதி வலியுறுத்தினார்.



கேள்வி நேரத்தின்போது இதுகுறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-

இ. கருணாநிதி: பல்லாவரம் தொகுதி, சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் அண்ணாவின் பெயரிலும், காமராஜர் பெயரிலும் உள்ளது. அந்த விமான நிலையத்திற்கு வருகின்ற பயணிகளெல்லாம் வசதியாக செல்வதற்காக கோயம்பேட்டிற்கும், கிளாம்பாக்கத்திற்கும் புதிய பேருந்துகள் இயக்கப்படுமா?

அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்: இந்த புதிய மீனம்பாக்கம் விமான நிலையத்தைப் பொறுத்தவரை கடந்த மழை, வெள்ளக் காலங்களில் அவர்கள் கோரிக்கை வைத்து அங்கே பேருந்துகளை இயக்கக்கூடிய சூழல் ஏற்பட்டது. நிரந்தரமாக பேருந்துகளை இயக்க வேண்டும் என்பது உறுப்பினர் அண்ணன் இ. கருணாநிதி அவர்களின் கோரிக்கை. நிச்சயமாக, விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

# சோழவந்தான் அரசு மருத்துவமனையை தரம் உயர்த்த வேண்டும்!

## சட்டப் பேரவையில் – ஆ.வெங்கடேசன் வலியுறுத்தல்!

சென்னை, ஏப். 4-

சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது பேசிய சோழவந்தான் தொகுதி கழக எம்.எல்.ஏ., ஆ.வெங்கடேசன், “சோழவந்தானில் உள்ள அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்திட வேண்டும்” என கோரிக்கை விடுத்தார்.



சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**அ.வெங்கடேசன்:** சோழவந்தானில் உள்ள அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா? ஆம் எனில், எப்போது?

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்:** மதுரை மாவட்டம், சோழவந்தான் அரசு மருத்துவமனை 1940 ஆம் ஆண்டு Maternity home ஆக ஆரம்பிக்கப்பட்டு 1981 ஆம் ஆண்டு முதல் வட்டம் சாரா அரசு மருத்துவமனையாக 20 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. இந்த மருத்துவமனையில், உள் நோயாளிகள் பிரிவு, புற நோயாளிகள் பிரிவு, மகப்பேறு சிகிச்சை பிரிவு, பல் சிகிச்சை பிரிவு, சித்தா பிரிவு, ஆய்வகம், உடற்கூறாய்வு பிரிவு, அறுவை சிகிச்சை பிரிவு, தொழு நோய் பிரிவு, ECG, Ultrasound, Scan போன்ற பல்வேறு வசதிகளும், 5 மருத்துவர்களும், 6 செவிலியர்களுடனும் இங்கே சிறப்பாக பணியாற்றி வருகின்றார்கள். சட்டமன்ற உறுப்பினர், ஏற்கெனவே வைத்த கோரிக்கையினை ஏற்று, தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலைப் பெற்று 15 ஆவது நிதி ஆணையத்தின்கீழ் ரூ. 3.50 கோடி மதிப்பீட்டில் இதே மருத்துவமனை வளாகத்தில் பழையக் கட்டடங்களை எடுத்துவிட்டு புதிய கட்டடங்கள் கட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது

**ஆ.வெங்கடேசன்:** மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், அந்த மருத்துவமனையை தரமுயர்த்தி, கூடுதல் கட்டடம் கட்டித் தரப்படும் என்று கூறினார்கள். அதற்காக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த மருத்துவமனையில் கூடுதல் படுக்கை மற்றும் CT scan வசதிகளை அமைச்சர் செய்து தருவார்களா?

**அமைச்சர் மா. சுப்பிரமணியன்:** அரசு மருத்துவமனைக்கு குறிப்பாக வட்டம்சாரா அரசு மருத்துவமனைக்கு என்னவெல்லாம் வசதிகள் தேவையோ அந்த வசதிகளெல்லாம் தற்போதும் இருக்கின்றன. இன்னமும் கூட 3½ கோடி ரூபாயில் புதிய கட்டடமும் வரவிருக்கிறது. அந்தக் கட்டடத்திற்குத் தேவையான மருத்துவ உபகரணங்களும் வாங்கித் தரப்படும்.

**ஆ. வெங்கடேசன்:** கச்சைகட்டி மற்றும் அம்பலத்தடி ஆகிய கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டி திறக்கப்படும் தருவாயில் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவற்றை மக்கள் பயன்பாட்டிற்கு எப்போது அளிப்பார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

பாலமேடு பகுதியில் 108 ஆம்புலன்ஸ் வசதி வேண்டும் என்று வெகு நாட்களாகக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்ற மாதம் அங்கு வந்திருந்தபோது அதுகுறித்து கோரிக்கை வைத்தோம். அக்கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றித் தந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இது மக்கள் பயன்பாட்டிற்கு எப்போது அளிக்கப்படும்?

**அமைச்சர் மா. சுப்பிரமணியன்:** கட்டி முடிக்கப்பட்டிருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் ஆகியவற்றிற்கான கூடுதல் கட்டடங்களை அடுத்து வருகிற பேரவை விடுமுறை நாட்களில் திறந்து வைப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி தொகுதி உட்பட்ட கிருஷ்ணா சமுத்திரம் ஊராட்சியில் 29 லட்சம் ரூபாயில் மதிப்பில் வேளாண் தனியா சேமிப்பு கிடங்கை திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல் ஏ. அடிக்கல் நாட்டி பணியை துவக்கி வைத்தார் உடன் ஒன்றிய கழகச் செயலாளர் என். கிருஷ்ணன், டி.ராமதாஸ், பா.டில்லி பாபு, கோவேந்தன், வேலு, ஏ.எல்.விஜயகுமார், கழக நிர்வாகிகள் பொதுமக்கள் பலர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சாத்தான்குளம் அ. மகாராசன்
### ஏப்ரல் 4 (2012)



**திராவிடர் கழகத்திலிருந்து விலகி, கழகம் துவங்கியதும், அதில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.**


**1957 முதல் திருச்செந்தூர் வட்ட துணைச் செயலாளராகவும், சாத்தான்குளம் பேரூர்ச் செயலாளராகவும், தொடர்ந்து 20 ஆண்டுகளுக்கு மேலாக சாத்தான்குளம் ஒன்றியச் செயலாளராகவும், மேலும் தூத்துக்குடி மாவட்ட துணைச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**மும்முனைப் போராட்டம் முதல் கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். நெருக்கடிகால மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### என்.எஸ்.மணி
### ஏப்ரல் 4 (1994)



**கழகம் தொடங்கிய நாளிலிருந்தே, உறுப்பினராகி தனது கிராமப்புறப் பகுதியில் கழகத்தை வளர்த்தவர்.**

**உத்திரமேரூர் ஊர்கிளைச் செயலாளர், வட்டச் செயலாளர், ஒன்றியச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.**

**பதினான்கு ஆண்டுகள் உத்திரமேரூர் பேரூராட்சி மன்றத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம், இந்தித் திணிப்பு எதிர்ப்பு போராட்டம் என கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**